# கல்லணையிலிருந்து கழனிக்கு!

## முதல்வர் கலைஞர்



சென்னை சத்தியமூர்த்தி மக்களாட்சிப் பயிற்சி மையத்தில் ஆற்றிய உரை

# கல்லணையிலிருந்து கழனிக்கு!

## முதல்வர் கலைஞர்

சத்தியமூர்த்தி அவர்களுடைய பெயரால் நல்ல சிந்தனையோடு நாடும், சமுதாயமும் முன்னேறுவதற்கு ஏற்ற ஒரு முயற்சியாக மக்களாட்சிப் பயிற்சி மையம் ஒன்றைத் தொடங்குகின்ற இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு அந்த மையத்தைத் தொடங்கி வைக்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைக்கு விழாத் தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல மக்களாட்சியினுடைய பல்வேறு கட்டங்களில் அதற்கென உருவாகியுள்ள பல்வேறு அமைப்புக்களில் எந்த அளவிற்கு அனுபவரீதியான பயிற்சிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதனை நாம் எண்ணிப் பார்த்து எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

என்னுடைய ஐம்பதாண்டுக் காலப் பொது வாழ்க்கையில் 25 ஆண்டுக் காலத்திற்கு மேலாக ஆட்சி மன்றத்தில் மக்களுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றவன். அதிலும் நான் ஆட்சி மன்றத்திலே சட்டப் பேரவையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினனாக அந்தத் தொகுதி மக்களுடைய தேவைகளை எடுத்துச் சொல்லக் கூடிய வாய்ப்புப் பெற்றவனாக அதே நேரத்தில் பொதுவான, நாட்டு மக்களுடைய தேவைகளைக் கோடிட்டுக் காட்டக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தவனாக நுழைந்தபோது— சி.சுப்பிரமணியம் அவர்கள் அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார்கள். எனவே இன்றைக்கு நான் ஏதாவது நிர்வாகத் துறையிலே பயிற்சி பெற்றிருக்கிறேன் என்றால்—சமுதாயத் துறையிலே தந்தை பெரியாரிடத்தில், அரசியல் துறையிலே அறிஞர் அண்ணா அவர்களிடத்தில், அதைப் போலவே தொடர்ந்து ஆட்சி மன்றத் துறையிலே நிர்வாகத் துறையில் அவர்கள் சொல்லிக் கொடுத்தார்களோ இல்லையோ, அவர்களைப் பார்த்துப் பயிற்சி பெற்றவன் என்ற முறையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடத்தில், பெரியவர் சி.எஸ். அவர்களிடத்தில், பெரியவர் பக்தவத்சலம் அவர்களிடத்தில், ஆர். வெங்கட்ராமன் அவர்களிடத்தில் அந்தப் பயிற்சியை

மு.க. அறக்கட
ஆய்வக

னால் சட்டமன்றப் பணியின்போது பெற முடிந்தது. அதனை நான் உள்ளபடியே ஒரு பெருமையாகக் கருது கிறேன். பயிற்சிகள் அவர்கள் சொல்லிக் கொடுத்து மாத்திரம் ஏற்படுவதில்லை. அவர்களைப் பார்த்துக்கூட நாமாகக் கற்றுக் கொள்ளக்கூடிய பயிற்சிகளும் உண்டு. சில நேரங்களில் சொல்லிக் கொடுக்க மறுத்தால்கூட, குருவை நினைத்துக் கொண்டு பயிற்சி பெறுவதற்கு எடுத்துக்காட்டாக ஏகலைவன் கதையேகூட இருக்கின்றது.

6507

அந்த வகையில் அப்படிப்பட்ட ஆர்வம் இருந்த காரணத்தினால் அத்தகைய பயிற்சிகளை எங்களைப் போன்றவர்களால் பெறமுடிந்தது. இன்றைக்கு இருக்கின்ற இடர்ப்பாடே என்னவென்றால் அந்த ஆர்வம் பெரும்பாலானவர்களிடத்திலே மங்கிப் போய் இருக்கின்றது. இப்போது நமக்கு இருக்கின்ற பெரியவேலை— முதலில் பயிற்சி பெற வேண்டும் என்ற ஆர்வத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் உருவாக்க வேண்டும். அந்த ஆர்வத்தை உருவாக்கிய பிறகு அவர்களைப் பயிற்சிக்குத் தயாராக்க வேண்டும். ஆக இரண்டு வேலை. முதலிலே பயிற்சி பெற வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள் இருந்த காரணத்தால் பயிற்சி அளிப்பது எளிதாக இருந்தது. அதற்கு ஒரு உவமை சொல்ல வேண்டுமேயானால், ஈர விறகை வெயிலிலே காய வைத்துப் பிறகு அடுப்பெரிக்கப் பயன்படுத்துவதைப் போல! விறகு ஈரமாகி விட்டால் அதைக் காய வைப்பதைப் போலத்தான் ஆர்வத்தை ஊட்டுவதாகும். அதாவது பயிற்சி பெற வேண்டுமென்ற ஆர்வத்தை ஊட்டுவதாகும்.

க 324.5146

## உத்திரமேரூர் கல்வெட்டு கூறும் உண்மைகள்

மக்களாட்சி மாண்பு என்பது குறிப்பாகத் தமிழ் நாட்டுக் கிராமப்புறங்களில், சிற்றூர்களில், பேரூர்களில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே சங்க காலத்திலேயே தொடங்கப்பட்ட ஒன்றாகும். கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் தங்களுக்குத் தேவையான தலைவர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் முறையைப் பல்லாண்டுக் காலத்திற்கு முன்பே உரித்தாக்கிக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு உத்திரமேரூர் கல்வெட்டு இன்றைக்கும் சாட்சியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

உத்திரமேரூர் கல்வெட்டின் மூலமாகக் கிடைக்கின்ற உண்மைகள் அந்தக் காலத்திலேயே வட்டவாரியாக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதும் அவர்கள் எந்தெந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதும் வரையறுக்கப்பட்டிருந்தன. இங்கே பெரியவர் சி. எஸ். குறிப்பிட்டதைப் போல அறிவு-ஆற்றல்-பண்பு என்ற இந்த மூன்றும் அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்கு அன்றைக்கே ஒருவிதியாக - விதிமுறையாக ஆக்கப்பட்டு அத்தகையவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதை உத்திரமேரூர் சாசனம் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டுக் கிராமப் பகுதிகளிலே இருந்தது அந்த முறை என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. இன்னும் சொல்லப்போனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்புள்ள சங்க இலக்கியத்திலே கூட வாக்களித்து ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் முறை இருந்தது. அதற்குக் குடவோலை முறை என்று பெயர். ஓலைகளில் தாங்கள் விரும்புகின்ற பெயர்களை எழுதி, அதனைக் குடங்களிலே போட்டுக் கட்டிவிட்டு, குறித்த நேரத்தில் அந்தக் குடங்களைப் பிரித்து உள்ளேயிருக்கின்ற ஓலைகளை எடுத்து, யார் யாருடைய பெயர் எழுதப்பட்டிருக்கின்றது என்று பார்த்து, யாருடைய பெயர் பெரும்பாலான ஓலைகளிலே எழுதப்பட்டிருக்கின்றதோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதைச் சங்க இலக்கியத்தின் மூலமாக எப்படி உணர முடிகின்றது என்றால் ஒரு புலவன் பாடிவைத்திருக்கிறான். அவன் முடிந்துவிட்ட ஒரு போர்க்களத்தின் பக்கமாகச் சென்று கொண்டிருக்கும் போது—போர் முடிந்துவிட்டது. போர்க்களத்திலே வீழ்ந்து கிடக்கின்ற வீரர்களின் சவங்களைக் கழுகுகளும், காக்கைகளும், நரிகளும் நாய்களும் தின்று கொண்டிருக்கின்ற காட்சியைக் காணுகின்றான். காணும்போது ஒரு கழுகு ஒரு வீரனுடைய வயிற்றை தன்னுடைய கூர்மையான அலகால் கிழித்து அவனுடைய குடலை உருவிக் கொண்டிருக்கின்ற காட்சியைப் பார்க்கின்றான். அந்தச் சங்க காலத்துப் புலவன் அதைப் பற்றி எழுதுகிறான். கழுகு இறந்து கிடக்கின்ற வீரனுடைய குடலை உருவுவது எப்படியிருக்கின்றது என்றால் கிராமப்புறங்களிலே குடவோலை முறையிலே குடத்திற்குள்ளே போடப்பட்ட ஓலைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்ப்பது போல இருக்கின்றது என்று புலவன் எழுதுகின்றான். எனவே சங்க காலத்திலேயே தலைவனைத் தேர்ந்தெடுக்கக் குடவோலை முறை என்ற தேர்தல் முறை இருந்திருக்கின்றது.

## அரசர் ஆட்சி, அன்னியர் ஆட்சி நீங்கி 'அக' ஆட்சி நடைபெறுகிறது

பெரியவர் சி.எஸ். குறிப்பிட்டதைப் போல முடியாட்சி-குடியாட்சி-தடியாட்சி என்ற மூன்று வகைப்பட்ட ஆட்சிகள் உலகத்திலே கூறப்பட்டாலும், இந்தியாவைப் பொறுத்தவரையிலே முதலிலே நடைபெற்றது அரசர் ஆட்சிகளாக இருந்தது. அதற்குப் பிறகு அன்னியர் ஆட்சி நுழைந்தது. இப்போது அக ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

அகம் என்பது ''புறம்-அகம்'' என்ற இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டின் அடிப்படையிலே அகம் என்றால் நம்மால் நடத்தப்படுகின்ற ஆட்சி என்கின்ற பொருளிலே நான் குறிப்பிடுகின்றேன். புறஆட்சி அன்னிய ஆட்சியாக இருந்தது. முதலிலே அரசர் ஆட்சி நடைபெற்றது. அரசர் ஆட்சி நடைபெற்ற அந்தக் காலத்திலேயே உள்ளாட்சி மன்ற முறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு — அந்தந்தக் கிராமத் தலைவர்கள் மூலமாக அந்தக் கிராம மக்கள் கவனிக்கப்பட்டு, அவர்களோடு மேலே இருந்த அரசர்களுடைய ஆட்சி ஒரு தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடிய சாதனங்கள் அன்றைக்கே இருந்தன. அதற்குப் பிறகு அன்னியர்களுடைய ஆட்சி இங்கே நுழைந்தபிறகு உள்ளாட்சித் தத்துவத்திற்கே ஊறு ஏற்பட்டு உள்ளாட்சி மன்றங்களே இல்லை என்ற ஒரு சூழல் உருவாயிற்று.

அந்த நேரத்திலேதான் 1882 அல்லது '84ஆம் ஆண்டில் — அன்றைக்கு கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு ரிப்பன் பிரபு அவர்கள் உள்ளாட்சி மன்றத் தத்துவத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்கின்ற ஒரு எண்ணத்தோடு அன்றைக்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார் என்று வரலாறு கூறுகின்றது. அன்னியர் ஆட்சியிலேயே அழிக்கப்பட்ட உள்ளாட்சித் தத்துவம் மீண்டும் புத்துயிர் பெறக்கூடிய வகையில் 1882 அல்லது 1884ஆம் ஆண்டில் வரலாற்றில் இந்த ஆண்டுக் கணக்கு இரண்டு விதமாகக் குறிக்கப் பெற்றிருப்பதால் நான் இரண்டையும் சொல்கிறேன். அந்த ஆண்டில் இந்தியா முழுவதும் கல்கத்தாவிலிருந்து இம்பீரியல் கவர்ன்மெண்ட் மூலமாக மாகாணங்களுக்கு எந்தவிதமான உரிமைகளும் இல்லாமல் ஆளப்பட்டு வந்த அந்தக் காலத்தில், லார்டு ரிப்பன் அவர்கள் ஒரு மாகாணத்திற்கும் மற்றொரு

மாகாணத்திற்கும் பல வேறுபாடுகள் உள்ளன, ஆகவே இந்த வேறுபாடுகளைக் கருத்தில்கொண்டு உள்ளாட்சிச் சட்டங்கள் அமைய வேண்டும் என்பதை உணர்ந்தார் என்று வரலாறு குறிப்பிடுகின்றது.

## நாடு முழுவதும் ஒரே மாதிரிச் சட்டம் நன்மை பயக்காது

அப்படி உணர்ந்த காலத்தில் "பிரிட்டிஷ் இந்தியா பரந்த நிலப் பரப்புள்ள தனது பல்வேறு பிரதேசங்களுக்கு இடையே பற்பல வேறுபாடுகளைக் கொண்ட மாபெரும் நாடாகும்" என்று அந்தத் தீர்மானத்திலே குறிப்பிட்டுவிட்டு, "இந்நிலையில் நாடு முழுதும் ஒரே மாதிரியான—வேறுபாடற்ற சட்டத்தைக் கொண்டுவர முயன்றால் அது எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்தும் என்று எதிர்பார்க்க முடியாது. அத்தகைய முயற்சி அபத்தமான ஒன்றாக முடிந்துவிடும். உதாரணமாக பஞ்சாபுக்கும், மதராசுக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. அதே மாதிரி வங்காளத்தின் நிலையையும், பர்மாவின் நிலையையும் ஒப்பிட முடியாது. (அப்போது பர்மா இந்தியாவோடு இருந்தது. அதனால் அது சொல்லப்பட்டிருக்கின்றது) எனவே பல்வேறு மாகாணங்களில் ஒரேவிதமான உள்ளாட்சி அமைப்பு நடைமுறையில் வெற்றி அடையுமென்று எதிர்பார்ப்பது விவேகம் ஆகாது. இதனால்தான் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவரவர்களுடைய நிலையை ஒத்து ஏற்பாடுகள் செய்வது அவசியம் என்று உள்ளாட்சி பற்றிய லார்டு ரிப்பனுடைய தீர்மானம் குறிப்பிடுகின்றது.

இந்தத் தீர்மானத்தை ஆங்கிலத்திலே குறிப்பிட வேண்டுமேயானால்

".........the Governor-General in Council would observe that he is quite aware of the absurdity of attempting to laydown any hard and fast rules which shall be of universal application in a country so vaste,and in its local circumstances so varied, as British India. It would be unreasonable to expect that any uniform system of Local Government could be applied with equal success in provinces differering as the Punjab, for instance from Madras, or Bengal from Burma. A large latitude of application must, therefore, in every case be left to the local authorities".

ஏதோ லார்டு ரிப்பன் என்ற ஒரு ஆங்கிலேயர் சொன்னதை நான் இன்றைக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுவதாகத் தயவுசெய்து யாரும் கருதிவிடக்கூடாது. ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கேற்ப இதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## பஞ்சாயத்து சட்டத்திலே காமராஜர் செய்த புரட்சி

இன்றைக்கு இந்தியா என்பது தமிழ்நாட்டைப் போல ஒரேவிதமான மாநிலம் அல்ல. அப்படி இல்லாத காரணத்தினாலேதான் இந்தியாவிலே பஞ்சாப் இருக்கின்றது. ஒரிசா இருக்கின்றது. மேற்கு வங்கம் இருக்கின்றது. உத்தரப் பிரதேசம் இருக்கின்றது. தமிழ்நாடு இருக்கின்றது. ஆந்திரம் இருக்கின்றது. கேரளம் இருக்கின்றது. இப்படிப் பல மாநிலங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் எண்ணித்தான் ஆங்கிலேயர்களுடைய காலத்திலே உருவாக்கப்பட்ட இந்த உள்ளாட்சி முறைகளிலே கூட இருக்கின்ற தவறுகள் உணரப்பட்டு 1951-ஆம் ஆண்டிலும், அதற்குப் பிறகு பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற 1958ஆம் ஆண்டிலும் சில புரட்சிகரமான மாறுதல்கள் இந்தச் சமுதாய நலத்திட்டங்கள் என்ற தலைப்பிலே உருவாக்கப்பட்டன. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், இங்கே செங்கல்வராயன் அவர்கள் சொன்னதைப்போல, சத்தியமூர்த்தி அவர்களைத் தன்னுடைய குருநாதராக ஏற்றுக்கொண்டவர். சத்தியமூர்த்தி அவர்களுக்கு இந்தக் கிராமங்களுடைய வளர்ச்சியிலும், நகர்ப்புறத் தூய்மையிலும் எவ்வளவு அக்கறை இருந்தது என்பதை, சத்தியமூர்த்தி அவர்கள் அவருடைய மகளுக்கு எழுதிய கடிதங்களில் நான் படித்துப் பார்த்திருக்கின்றேன். "லட்சுமிக்கு எழுதிய கடிதங்கள்'' என்ற தலைப்பிலே வெளியான அந்தக் கடிதங்களிலே கிராமங்களிலே எந்த அளவிற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும், எந்த அளவிற்குக் கிராமங்கள் சுயாட்சி பெற்றுத் திகழ வேண்டும், கிராமங்களை வளர்ப்பதற்கு அந்தக் கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களும் எவ்வளவு துணை நிற்க வேண்டும், அந்த மக்களோடு இணைந்து அரசு எந்த அளவிற்கு ஆர்வம் காட்டவேண்டும் என்பவைகளை எல்லாம் அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டிருக்கின்றார். அதைப் போலவே நகர அமைப்புகளைப் பொறுத்த

வரையிலே அவைகளை ஒரு அரசு-அந்த நகர நிர்வாகம் அந்நகரத்தின் தூய்மையைக் காப்பாற்ற வேண்டும் என்பதிலே காட்டுகின்ற அக்கறையைப் போலவே மக்களும் காட்ட வேண்டும். கண்ட இடத்திலே குப்பையைப் போடுகின்ற சாதாரண சங்கதியிலிருந்து தூய்மையைக் காப்பாற்றுகின்ற பெரிய காரியம் வரை மக்களுக்கும் அதிலே பங்கு இருக்கின்றது என்பதை அந்தக் கடிதங்களிலே சத்திய மூர்த்தி அவர்கள் மிகத் தெளிவாக உணர்த்தியிருக்கின்றார்கள்.

## மூன்றடுக்குத் திட்டமாகப் பஞ்சாயத்து செயல்படுகிறது

அவரைத் தன்னுடைய தலைவராக — வழிகாட்டியாக ஏற்றுக்கொண்ட பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் 1958 ஆம் ஆண்டு — அப்போது சி.எஸ். அவர்களும் அமைச்சரவையிலே இடம்பெற்றிருக்கின்றார்கள். ஒரு மாறுதலை உருவாக்கி, ஊராட்சி மன்ற அமைப்புகள், ஒன்றிய அமைப்புகள் — அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் இடம் பெற்றிடக் கூடிய ஒன்றிய அமைப்புகள் — அதற்கு அடுத்த மூன்றாவது கட்டமாக மாவட்டத்திலே டி.டி.சி. என்று சொல்லப்படுகின்ற மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் — அந்தக் குழுக்களிலே சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவார்கள். ஒன்றியங்களிலே பெருந்தலைவர்களாக இருப்பவர்கள் இடம் பெறுவார்கள். அப்படி இடம் பெற்ற அந்தந்தப் பகுதிகளின் தேவைகளை மாவட்ட ஆட்சித் தலைவருடைய முன்னிலையிலே எடுத்துரைப்பார்கள். விவாதிப்பார்கள். நானே தஞ்சைத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்து தஞ்சை மாவட்டத்திலே நடைபெற்ற அந்த மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டங்களுக்குச் செல்கின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றேன். என்னுடைய தொகுதியின் தேவைகளை எடுத்துக் கூறியிருக்கின்றேன். அதைப் போலவே ஒவ்வொரு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்களும் பேசியிருக்கின்றார்கள். அவர்களை விட அதிகமாக ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் அந்த மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அதுவும் மூன்றடுக்கு என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்களைக் கொண்ட ஒரு அடுக்கு, அடுத்து ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களைக் கொண்ட மற்றொரு அடுக்கு, இவர்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய

சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் அடங்கிய மூன்றாவது அடுக்காக மாவட்ட அளவிலே 58-ஆம் ஆண்டிலே பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலக் கட்டத்திலே உருவாக்கப்பட்டு நல்ல முறையிலே அதனுடைய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

அதற்குப் பிறகு அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலக் கட்டத்தில் ஒரு சிறு மாறுதல். ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் எல்லாம் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால் நல்லது அல்லவா என்ற ஒரு கருத்து. அதை ஏற்கனவே நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது வலியுறுத்திக் கொண்டு வந்த கருத்து. ஏனென்றால் முதலிலே உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, உறுப்பினர்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது என்ற நிலை கிராமப்புறத்திலே வரும்போது உறுப்பினர்கள் கடத்தப்படுவது ஒரு சகஜமான நிலையாக இருந்து வந்தது. சி.எஸ். அவர்களுக்கு நினைவிருக்குமென்று கருதுகின்றேன். அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலேயே சொன்னார்கள். அதைக் கேட்டு சி.எஸ். குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள். "இப்போது மறைமுகமான தேர்தல் அதாவது 'INDIRECT' முறை தேர்தல் இருக்கின்ற காரணத்தால் பல இடங்களிலே இன்னமும் ராமாயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சீதையை ராவணன் தூக்கிக் கொண்டு போனதைப் போல உறுப்பினர்களைத் தூக்கிக் கொண்டு போகின்ற நிலைமை இருக்கின்றது". என்று அண்ணா அவர்கள் சட்டசபையிலே சொன்னார்கள்.

அந்த அடிப்படையில்தான் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் ஊராட்சி மன்றத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க நேரடித் தேர்தல் — மக்களே நேரடியாக ஊராட்சி மன்றத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்ற நிலையை அவர்கள் உருவாக்கினார்கள். அப்பொழுதே ஒன்றியங்களுக்கும் அந்த முறை தேவை என்று சொல்லப்பட்டது. படிப்படியாகச் செய்யலாம் என்று அண்ணா சொன்னார்கள். அதற்குப் பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் ஒன்றியங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் தலைவர்

தேர்தலைப் பொறுத்தவரை மறைமுகத் தேர்தல் இல்லாமல் நேரடியாகத் தேர்தல் என்று சட்டம் கொண்டு வந்தார்கள். அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முடிவாக இருந்தது. ஆனால் அப்படி ஒரு சட்டம் வந்ததே தவிர உள்ளாட்சிகளுக்குத் தேர்தல் நடைபெற வில்லை. பிறகு தமிழ்நாட்டிலே அந்தத் தேர்தல்கள் நடைபெறவேண்டுமென்ற எண்ணம் வலியுறுத்தப்பட்டு 86-ஆம் ஆண்டு தேர்தல்கள் நடைபெற்று, இப்போது நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள் தங்களுடைய பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இது நிலவரம்.

இந்த நிலவரத்திலேதான் சி.எஸ். அவர்கள் தலைமை உரையிலே எடுத்துக்காட்டியதைப் போல சில மாறுதல்கள் இவைகளிலே செய்ய வேண்டுமென்று ஒரு கருத்து உலவி — அது சட்டமாக ஆக்கப்படுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டு — இன்னும் முழுமையாகச் சட்டம் ஆகாத அளவில் நாம் இந்தப் பயிற்சி மையத்தைப் பற்றி இங்கே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

நான் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு இப்போது விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற சட்டத்தைப்பற்றி ஒரு நீண்ட கடிதமே கூட எழுதினேன். அந்தக் கடிதத்தின் கருத்துக்களை சி.எஸ். அவர்களும் கூட வரவேற்று ஒரு அறிக்கை விடுத்தார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அனைவரும் விரும்பியதைப் போல ஒரு நாடு தழுவிய விவாதம் இதற்கு நடைபெற முடியாமல் போய் விட்டது. எனக்கு இருக்கின்ற அச்சம் எல்லாம் இன்றைக்கு இருக்கின்ற பெரும்பான்மையைக் கொண்டு இந்தச்சட்டத்தை நிறைவேற்றிவிட்டால் அதற்குப் பிறகு இதனால் ஏற்படக்கூடிய தீங்குகளைக் களைவதற்கு மீண்டும் அரசியல் சட்டத்திலே ஒரு திருத்தம் கொண்டு வர, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்படும்போது என்ன சங்கடம் ஏற்படும் என்பதைத்தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதனால்தான் வெறும் முதலமைச்சர்கள் அளவிலே ஒரு பொதுவான கருத்தை மாத்திரம் எடுத்துச் சொல்லி இதைக் கொண்டு வருகின்றோம் என்று கூறினால் போதாது, என்னென்ன ஷரத்துக்கள் அடங்கிய திருத்தமாக இது வரப்போகின்றது என்பதை எடுத்து வைத்து,

அந்த ஒவ்வொரு ஷரத்தின் மீதும் முதலமைச்சர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய கருத்துக்களை அறிந்து — முதலமைச்சர்கள் மாத்திரமல்ல, நல்ல அரசியல் தெளிவுள்ள தலைவர்கள் நாட்டில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். வட மாநிலங்களிலும், தென் மாநிலங்களிலும் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட அரசியல் தெளிவு படைத்த தலைவர்கள், அனுபவம் மிக்க தலைவர்கள், ஆற்றலாளர்கள், அந்த மேதைகளை எல்லாம் அழைத்து அவர்களிடத்திலும் கருத்துக்களை அறிந்து இது என்றென்றும் பயன்படக் கூடிய ஒன்றாக — அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாக இந்த நிலை எடுக்கப்பட வேண்டுமென்று சொன்ன கருத்து இன்றைக்கு ஏற்கப்படவில்லை. நான் அதை இந்த நல்ல விழாவில் தொடக்கத்தில் விவாதமாக ஆக்கி அரசியலை இங்கே புகுத்த விரும்பவில்லை. ஆனால் இதில் அரசியல் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் கிராமப்புறத்திலே இருக்கின்ற சாதாரண பாமர மக்களை நிர்வகிப்பதற்கு யார் பொறுப்பேற்பது என்பதுதான் பிரச்சினை. இது வரையில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் — வேறு சில மாநிலங்களைப் பொறுத்த வரையில் இருந்த அமைப்பில் எந்த விதமான பாதகமும் இல்லை. ஒரேயொரு குறை — குறித்த நேரத்தில் தேர்தல்கள் நடைபெறவில்லை என்று சொல்லலாம். அதற்கு, 'ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பஞ்சாயத்துத் தேர்தல்கள், ஒன்றியத் தேர்தல்கள், நகராட்சித்தேர்தல்கள் நடைபெற்றே தீர வேண்டும்' என்ற ஒரு திருத்தத்தை அழுத்தந்திருத்தமாக அரசியல் சட்டத்திலே நிறைவேற்றி விட்டால் போதுமானது என்பதுதான் நம்முடைய எண்ணம். மற்றவைகள் மாநிலங்கள் சார்பாக நடைபெற வேண்டும். ஏனென்றால் இந்தியா ஒரு கூட்டாட்சி அமைப்பு. ஆனால் அரசியல் சட்டத்தில் இது கூட்டாட்சி அமைப்பு என்று பொறிக்கப்படாவிட்டாலும் கூட இது கூட்டாட்சி அமைப்புதான். அதனைப் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களே 1954 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் மாநிலத்திலே உள்ள எல்லா முதலமைச்சர்களுக்கும் எழுதிய ஒரு கடிதத்தில் மிகத் தெளிவாக, ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

"நாம் ஒரு கூட்டாட்சி ஒன்றியமாக (ஃபெடரல் யூனியன்) மாநிலங்களில் மிகுதியான சுயாட்சி அமைப்புடன் உள்ளோம். இந்தச் சுயாட்சி அமைப்பு நல்லது என்று நான் நினைக்கிறேன்'' என்று நேரு கூறியிருக்கிறார்.

எனவே அரசியல் சட்டத்திலே கூட்டாட்சி என்ற சொல் இல்லாவிட்டாலும் கூட, அம்பேத்கார் அவர்களே குறிப்பிட்டிருப்பதைப்போல யூனியன் என்பதே கூட்டாட்சியைத்தான் குறிக்கும் என்கின்ற அந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளும்போது, அந்தக் கூட்டாட்சித் தத்துவத்திற்கு இடையூறு, மாநிலங்களுக்கு ஏற்கனவே இருக்கின்ற அதிகாரங்களைப் பறிப்பதால் உருவாகிவிடுமென்ற அச்சத்தின் காரணமாகத்தான் இதை நான் சொல்ல நேரிடுகின்றது.

அரசியல் சட்டத்தின் 7வது அட்டவணையில் இரண்டாவது பட்டியலில் ஐந்தாவதாக உள்ள பிரிவு ''உள்ளாட்சி அமைப்புகள்'' என்று கூறுகின்றது. இது எல்லா உள்ளாட்சி அமைப்புகளையுமே குறிப்பிடுவதாகும். இந்த இரண்டாவது பட்டியல் மாநிலப் பட்டியல் (ஸ்டேட் லிஸ்ட்) இதை நீங்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்த இரண்டாவது பட்டியலிலே உள்ளது முழுமையும் மாநில அரசுகளின் அதிகாரத்திற்கு உட்பட்ட விஷயங்களாகும்.

ஆனால் இப்போது அதிலே மாறுதல்கள் நடைபெறுவதைத்தான் நாம் மனச்சங்கடத்தோடு வெளியிட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆற்றுத் தண்ணீர் கழனிக்குப் போய்ச் சேர வேண்டும். ஆற்றுத் தண்ணீர் கழனிக்குப் போய்ச் சேர்ந்தால் தான் கழனியிலே பயிர் விளையும். அனைவருக்கும் புரியும். கல்லணையிலே இருக்கின்ற தண்ணீர் திருவாரூரிலே இருக்கின்ற ஒரு கழனிக்குப் போய்ச் சேர வேண்டுமென்றால், அப்படியே கல்லணைத் தண்ணீரை நேரடியாகக் கழனியிலே பாய்ச்சினால் கழனி மூழ்கிவிடும். அதற்காகத்தான் — இடையிடையே பற்பல சிற்றாறுகள், வாய்க்கால்கள் வழியாக அந்தத் தண்ணீரைக் கொண்டு போய், திருவாரூரிலே இருக்கின்ற கழனியிலே சேர்க்க முடியும்.

அதைப் போலத்தான் மத்திய அரசை கல்லணையாகக் கருதிக்கொண்டு அது செய்கின்ற உதவிகளை அந்த அதிகாரங்களை — அதற்கு இருக்கின்ற உரிமைகளை எல்லாம் அப்படியே ஒரேயடியாகக் கொண்டுபோய்க் கழனியிலே சேர்த்தால் — அது கழனிக்குப் பயன்படாமல் போய் விடும். அதை வகைப்படுத்தி, வரைமுறைப்

படுத்தி, வாய்க்கால் வழியாகக் கொண்டு போக வேண்டும். கல்லணை மத்திய அரசு என்றால் வாய்க்கால்கள் மாநில அரசுகளாக இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய கருத்தாகும்.

எனவே கல்லணைத் தண்ணீர் கழனிக்கு வேண்டாமென்று யாரும் சொல்லமாட்டார்கள். ஆனால் அது வகையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றுதான் நாம் சொல்கிறோம். அப்படிப் பயன்படுத்தப்படுகின்ற அந்தத் தண்ணீரைப் பெறுகின்ற அந்தக் கழனியிலே இருக்கின்ற உழவர்கள் எப்படி மடை கோல வேண்டும், எப்படிக் களையெடுக்க வேண்டும், எப்படிப் பயிர் செய்ய வேண்டும், எப்படி அறுவடை நடத்த வேண்டும், எப்படி அறுவடைக்குப் பிறகு அந்த நெல்மணிகளைப் பாதுகாக்க வேண்டும் - இவைகளைப் பற்றியெல்லாம் பயிற்சி பெறத்தான் இந்த மக்களாட்சிப் பயிற்சி மையம் இன்றைக்கு உருவாகின்றது. உருவாகின்ற மையம் விடுதலை வீரர் சத்தியமூர்த்தி பெயரால் உருவாவது மகிழ்ச்சிக்குரியது. இந்த மையத்தின் வளர்ச்சிக்கும் அதனுடைய வெற்றிகளுக்கும் தமிழக அரசு தன்னால் இயன்ற வகையிலே ஒத்துழைப்பு தரும் என்ற உறுதியினைக் கூறுகிறேன்.

**(சென்னையில் 22.8.89 அன்று சத்தியமூர்த்தி மக்களாட்சிப் பயிற்சி மையத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து)**

ஆய்வக
நூல்நிலையம்
சென்னை-18

**வெளியீடு :**

**இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்புத்துறை,**
**தமிழ்நாடு அரசு.**

***சிறப்பு வெளியீடு: 18***

தமிழரசு அச்சகம்.